மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல்வேறு மொழிகளில் அப்படிப்பட்ட குறிப்புகள் இருக்கின்றன. பெரும்பாலும் தமிழில் இருக்கின்றன, சில கிரந்தத்தில் இருக்கின்றன, சில கல்வெட்டுக்களில் சமஸ்கிருத மொழியில் இருக்கின்றன, சில தெலுங்கில் இருக்கின்றன, சில குறிப்புக்கள் உருது மொழியில்கூட இருக்கின்றன. இப்படியாக பல்வேறு மொழிகளில் குறிப்புகள் இருக்கின்றன. பெரும்பாலானவை தமிழில் இருக்கின்றன. அடுத்த படியாக கிரந்த மொழியில் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Copies of Ephigraphica Indica and annual reports of the Archaelogical Department are not being supplied to our Legislature Library. May I request the Hon. Minister to kindly see that such copies are supplied to our library?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று, அத்தகைய நூல்கள் வைக்கப் படாதிருந்தால், வைப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், கூடலூருக்கு அருகில் குமளிமலைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய கண்ணகி கோயில் பற்றி விவரக் குறிப்பு ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுகுறித்து தனியாக கேள்வி கேட்டால், அதுபற்றிய விவரக்குறிப்புகள், ஆராய்ச்சிகள் ஆகியவை சேகரித்துத் தரப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

இந்தி ஆசிரியர்கள்

*** 504 வினா.—திரு. சி. மணலி கந்தசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் இந்தி ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களில் எத்தனை பேர் இன்னும் வேலையின்றி இருக்கின்றார்கள் ?

(இ) அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா ?

1972 மார்ச் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்தி ஆசிரியர்களுக்குரிய தகுதிகளைப் பெற்றிருந்து, வேலையிழந்த முன்னாள் இந்தி ஆசிரியர்கள் எல்லோருக்கும் மாற்று வேலை தரப்பட்டுள்ளது. ஆனால் இந்தி ஆசிரியர்களுக்குரிய தகுதிகளைப் பெற்றிருதவர்களும் பகுதி நேர இந்தி ஆசிரியர்களுமான 631 பேருக்கு மாற்று வேலை தரப்படவில்லை.

(இ) அவர்களுக்கும் மாற்று வேலை அளிப்பது பற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 600-க்கும் அதிகமான இந்தி ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கல்வி அதிகாரிகளுக்குப் பிறப்பிக்க முடியுமா? அவர்களுக்கு மனு அனுப்பினால் அது மேலே இங்கே அனுப்பப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, சீஃப் எஜுகேஷனல் ஆபீசருக்கு முழு அதிகாரம் கொடுக்கக்கூடிய ஒரு சுற்றறிக்கை அனுப்பப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தி மொழி ஆசிரியர்களும், பகுதிநேர ஆசிரியர்களுமாகச் சேர்ந்து மொத்தம் 2,631 பேர் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் இந்திமொழி ஆசிரியர்களுக்கான தகுதியைப் பெறாதவர்கள் 631 பேரும், பகுதிநேர ஆசிரியர்கள் 12 பேரும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் இந்த 643 பேரும் பகுதிநேர ஊழியர்களாக சிலர் இருப்பதாலும், இந்தி மொழி ஆசிரியர்களுக்குரிய தகுதி பெறாதவர்களுமாக இருப்பதுதான். அவர்கள் தற்காலிகமாக அமர்த்தப்பட்டதால் மேற்படி சட்டத்தின் அடிப்படையில் ஆசிரியர் பதவி பெறுவதற்கு வழிவகை இல்லாமல் இருக்கிறது. பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் இத்தகையோருக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யவும், வேலைவாய்ப்புப் பெற்றுத் தரவும் முதல் சலுகை அளிக்கலாம் என்றும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் ஒரு பரிந்துரையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவருடைய பரிந்துரையின்மேல் அரசு விரைவில் தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, இந்தி மொழி ஆசிரியர்கள் புதிதாக அமர்த்தப்படும்போது அவர்களுக்கு உரிய ஊதியம் வழங்காமல், அதிக ஊதியம் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் எவ்வளவு? அந்த நஷ்டத்தை மத்திய அரசு கொடுக்க முன்வருமா? நமது தமிழக அரசு அதை மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெறுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தி மொழி ஆசிரியர்களுக்கு, அவர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்படுகிறதே தவிர, அதிக ஊதியம் வழங்கப்பட்டதாக தகவல் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 643 பேர் அப்போது 'அண்டர் எக்விப்டு' ஆக இருந்தார்கள் என்று கூறினார்கள். அவர்கள் இப்போது—'எக்விப்டு' ஆக—தகுதிக்குரியவர்களாக ஆகி வந்திருந்தால் அவர்களுக்கு இலாகா மூலமாக வேலை கொடுக்க தக்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது 643 பேர் இந்தி ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் இப்போது தகுதி யுடையவர்களாக ஆகியிருந்தால், அந்தப் பதவிக்கு வேலை இல்லை. ஏற்கெனவே இந்தமொழி ஆசிரியர்களுக்கு அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப வேலை தரலாம் என்று கருதப்பட்டது. அப்போது தகுதிபெறாத இந்தி ஆசிரியர்கள் இப்பொழுது தகுதியுடையவர்களாக தங்களை ஆக்கிக் கொண்டிருந்தாலும் இப்போது அவர்களை வைத்துக்கொள்ள முடியாது. வேறு வகையில் அவர் களுக்கு வேலைவாய்ப்புத் தரலாம்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அவர்கள் பதிவு செய்துகொள்வதன்மூலம், அவர்களுக்கு முதல் சலுகை அளிக்கலாம் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஒரு பரிந்துரையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன்பேரில் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி அரசு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

கோவை தலைமையிட மருத்துவ மனை

* 505 வினா.—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை தலைமை மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு என ஒதுக்கப் பட்டுள்ள படுக்கைகளை அதிகமாக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, கோவையிலே மருத்துவமனை யும் இருக்கிறது. அங்கே இருக்கிற மருத்துவமனையில் நிறைய குழந்தைகள் படுக்கைகள் தேவைப்படுகின்றன. அதை முன்னிட்டு ஒரு புதிய குழந்தை மருத்துவமனையை ஏற்படுத்தித்தர இனியாவது அரசு முயற்சி செய்யுமா?